இன்று இலவச மாதமிருமுறை மின்னிதழ்–2026 ஜீன் 1–15

இன்று மின்னிதழ்

இன்று என்றும் நன்று



லி.நௌஷாத் கான்

சிறப்பிதழ்



அனைவருக்கும் வணக்கம்.

மே மாதம் திரு.சுரேஷ் சிற்றம்பலம் அவர்களின் தயாரிப்பு அருமையாக இருந்தாக பலரும் பாராட்டினார்கள்.

மே மாதம் இரண்டாவது இதழாக வெளியாகவேண்டிய ஹைக்கூ... சிறப்பிதழ் சில நிர்வாக காரணங்களால் வெளியாகவில்லை.

இந்த இதழில் ஹைக்கூக்கள் வெளியாகிறது.

படைப்பாளர்கள் அதிக படைப்புகளை அனுப்பவேண்டாம். ஓரிரு படைப்புகள் மட்டும் அனுப்பவும். ஏனெனில் இன்றுவிலும் வெளியாகி மற்ற இதழ்களிலும் வெளியானால் தவறாகிவிடும்.

அடுத்த இதழை திரு.கே.அசோகன் அவர்கள் தயாரிக்கிறார்.

படைப்பாளர்கள், வாசகர்கள் உங்கள் ஆதரவை தொடர்ந்து எதிர்நோக்குகிறோம்...

ஆசிரியர் வெ.கோபிநாத்,

Whatsapp : 7094053241

e.mail– indhrumail@gmail.com

Web Site : www.indhru.in

சிறப்பாசிரியர்

நௌஷாத் கான் .லி









லி .நெளஷாத் (புனைப்பெயர் லி .நெளஷாத் கான்) என்கிற நான் முது நிலை மேலாண்மை பட்டப் படிப்பு முடித்தவன். கோயில் நகரமான கும்பகோணத்தில் பிறந்தவன், வந்தாரை வாழ வைக்கும் வந்தவாசியில் வளர்ந்தவன். சினிமா இயக்குனராக வேண்டும் என்பது என் வாழ்நாள் ஆசை ஆனால் குடும்ப சூழ்நிலை காரணமாக காலச்சக்கரம் பரிசளித்த விதியால் வருடம் 2010 முதல் 2026 தற்போது வரை ஒரு தனியார் நிறுவனத்தில் தரவு உள்ளீட்டாளராக பணிபுரிகிறேன் .

சினிமா மீது கொண்ட தீரா காதலால் என் சுவாசக்காற்றே, மாற்றம், பர்ஸ்ட் லவ் போன்ற தமிழ் குறும்படங்களில் கதை, வசனம் எழுதி இருக்கிறேன் . இது மட்டுமல்லாது இதுவரை கவிதை –கதை என என்னுடைய படைப்புகள் நூற்றுக்கும் மேற்பட்டவை பல தினசரி நாளிதழிலும், வார இதழ்களிலும், மாத இதழ்களிலும் பிரசுரமாகியுள்ளது.

கவிதை –கதை –நாவல் என இதுவரை இருபதுக்கும் மேற்பட்ட புத்தகங்கள் எழுதி இருக்கிறேன் ... என்னுடைய படைப்புகளை மணிமேலை பிரசுரம் 11 புத்தகங்களையும், காகிதம் பதிப்பகம் மூன்று புத்தகங்களையும், ஓவியா பதிப்பகம் ஒரு புத்தகத்தையும் –PGK ஆர்ட்ஸ் ஒரு புத்தகத்தையும், நண்பர்கள் பதிப்பகம் நான்கு புத்தகங்களையும், இனிய நந்தவனம் ஒரு புத்தகத்தையும், மௌவல் பதிப்பகம் இரண்டு புத்தகத்தினையும் வெளியிட்டு உள்ளது. மதி பதிப்பகம் வெளியிட்ட ஐம்பது படைப்பாளிகளின் இரண்டு கவிதை தொகுப்பு நூல்களிலும் எனது படைப்புகள் வெளிவந்துள்ளன.

நான் எழுதிய வெள்ளை காகிதத்தில் ஒரு கரும்புள்ளி என்ற சிறுகதை நூல் 2016 ஆம் ஆண்டின் சிறந்த சிறுகதை நூலுக்கான வானதி விருதினை பெற்றது. 2016 ஆம் ஆண்டு அமெரிக்காவில் உள்ள உலக தமிழ் பல்கலைக்கழகம் மூலம் மதிப்புறு முனைவர் பட்டமும் பெற்றுள்ளேன்.

2017 ஆம் ஆண்டு தஞ்சை பிரகாஷ் நினைவு வளரும் படைப்பாளர் விருது தமிழ்நாடு முற்போக்கு கலை இலக்கிய மேடை சார்பில் வழங்க பட்டது.

2023 ஆம் ஆண்டு நானெழுதி மௌவல் பதிப்பகம் வெளியிட்ட ஒரு துலுக்கப்பரதேசியின் ஜீவிதக்கதை ஒரு சாதாரண எளிய மனிதனின் வாழ்வியலை ,வலிகளை பதிவு செய்த நூலாகும். ஆசை சுமக்கும் மனித மனங்களில் நிராசையை சிலுவைகளாய் சுமந்த, வளைகுடா வாழ்வில் கஷ்டப்பட்ட ஒரு எளிய மனிதன் சந்தித்த நிகழ்வுகளை எந்த



லி.நௌஷாத் கான்
சிறப்பிதழ்

அலங்காரப்பூச்சும் இல்லாமல் உள்ளது உள்ளபடி உண்மைக்கு நெருக்கமாக பதிவு செய்து எழுதியதால் திருப்பூர் இலக்கிய விருதினையும் 2024 ஆம் ஆண்டு அந்நூல் பெற்றது .கடல் கடந்து வந்தாலும் தொடர்ந்து இலக்கியத் துறையில் பங்காற்றுவதால் முத்துக்கமலம் இணையஇதழ் ஆசிரியர் திரு.சுப்பிரமணி அவர்கள் மூலம் வெண் தாமரை விருதினையும் கடந்த வருடம் பெற்றேன். சினிமாவில் நுழைய முடியவில்லை என்றாலும் பாடல்கள், கவிதை, கதை, நாவல் என ஏதோ ஒரு வழியில் தீராத என் இலக்கிய தாகத்தை ஓரளவுக்கு தீர்த்து கொள்கிறேன் .

அன்புடன்,

–நௌஷாத் கான் .லி –

nowsathkumbakonam@gmail.com



திருப்பூர் இலக்கிய விருது கடல் கடந்து என் கரங்களில் கிடைத்த போது எடுத்த புகைப்படம்



லி.நௌஷாத் கான்
சிறப்பிதழ்

பாலைவனம்
மணல் பூத்த காடுகளில் வீசும்
அனல் காற்றில்
வெந்து தணியும் இளமை .
தனிமை மட்டுமே
எங்களுக்கு நிரந்தரம்.
இடைவிடாது துரத்தும்
கவலை
சுழலும் சக்கரம் போல
வேலை
விடியும் என்ற நம்பிக்கையில்
நாளை
இப்படித் தான்
ஓடும் நதி போல வாழ்க்கை
ஓடிக்கொண்டிருந்தாலும்
எங்கள் வாழ்க்கை
ஒரு நாள் நிற்கும்
மரணத்தின் வாசலில் ?!
தடைப்பட்ட ,
நின்று போன
கடிகாரம் கூட
ஒரு நாளைக்கு இருமுறை
சரியான நேரத்தை காட்டுகிறது –
ஏனோ
ஒரு நாள் கூட
அந்த இறைவன்
வாழ்க்கையை பிடித்த மாதிரி
வைக்க வில்லை .
அந்த ஈவு இரக்கமற்ற
இறைவன் மீது கோபப்பட்டு
அவன் சாபத்திற்கு
ஆளாக நான் விரும்பவில்லை.
மண்ணில்
மண்டியிட்டு
அவனிடம் கெஞ்சி கேட்கிறேன்
வாழ்க்கையில் கஷ்டம் வரலாம்
கஷ்டமே வாழ்க்கையாக கூடாது
என்றேன்
உன்னை விட்டால்
எனக்கு யாரு இருக்கா ?
உன்னை சோதிப்பதே
என் வாடிக்கை என்றான்
அடுத்தவர் வாழ்க்கையை
வேதனைப் படுத்தி
வேடிக்கை பார்க்கும்
இறைவனிடம்
புன்னகையித்தவாறே சொன்னேன்
நேசிப்பது மட்டுமல்ல
வெறுப்பதும்
ஒருவகை காதல் தான் .
கொதிக்கும்
பாலைமணலில்
தனிமையில் நின்று
கதறி சொல்கிறேன்
கவலையில் கூட
தோள் சாய
நிழலில்லாமல் தவிக்கிறேன்.
பாலைவனமாய்
வாழ்க்கை போனாலும்
சோதிக்கும் உன் பரிட்சையில்
தேர்ச்சி பெறுவேன் என்ற
நாளைய நம்பிக்கையின் பற்றுதலோடு
உன்னை நேசிக்கிறேன் –ஏனோ
இப்போதெல்லாம்
அந்த இறைவன்
முன்பை விட
அதிகம் வெறுக்கவில்லை !!

நௌஷாத் கான்





லி.நௌஷாத் கான்
சிறப்பிதழ்



சினிமா நடிகர் ராகுல் அவர்களுடன் நான்...



சினிமா நடிகர் விக்ராந்த் அவர்களுடன் நான்...




இயக்குநர் லோகேஸ் கனகராஜ் அவர்களுடன் நான்...



நடிகை சிஜா ரோஸ் அவர்களுடன் நான்...






ஐந்து முறை தேசிய விருது வாங்கிய
எடிட்டர் லெனின் ஐயா அவர்களுடன்



அமீரக தமிழ் எழுத்தாளர்
திரு.பரிவை சே.குமார்
அவர்களுடன்...



இசையமைப்பாளர்
திரு.தேவா அவர்களுடன் நான்...



லி.நௌஷாத் கான்
சிறப்பிதழ்



பிரபல பட்டிமன்ற பேச்சாளர் சகோதரி பர்வீன் சுல்தானா அவர்களுடன்



பிரபல திரைப்பட பாடலாசிரியர் திரு.யுகபாரதி அவர்களுடன்



மௌவல் பதிப்பகத்தின் நிறுவனர், கவிஞர் ஜனாப் வலங்கைமான் நூர்தீன் அவர்களுடன்...



கவிஞர் திரு.அறிவுமதி ஐயா அவர்களுடன்...



முன்னாள் முதலமைச்சர் திரு.ஸ்டாலின் ஐயா அவர்களுடன்...




என் நிறம் மாறும் மனிதர்கள் நூல் வெளியீட்டின் போது எடுத்த புகைப்படம் (இயக்குநர் கங்கை அமரன், சகோதரி விசாலி கண்ணதாசன், எழுத்தாளர் இந்துமதி அம்மா அவர்களுடன்)



அமீரக தமிழ் எழுத்தாளர் திரு.முகம்மது யூசூப் மற்றும் கவிஞர் பிரபு கங்காதரன் அவர்களுடன்...




ருவைஸ்–ல் வசிக்கும் தமிழ் எழுத்தாளர் திரு சிவமணி அவர்களுடன்



எழுத்தாளர் முருகேஷ் ஐயா அவர்களுடன்






நான் எழுதிய தடீச்சா பிரதா நூல் இயக்குனர் லோகேஷ் கரங்களில்



லி.நௌஷாத் கான்
சிறப்பிதழ்



நான் எழுதிய கண்ணீர் வடிக்கும் முலைகள் யோனிகள் சிறுகதை நூல் நடிகர் மாஸ்டர் மகேந்திரன் கரங்களில்



இயக்குநர் லோகேஷ் கனகராஜ் அவர்களின் உதவி இயக்குநர் மகேஷ் அவர்கள் உடன் நான்...



ஜூலை 2026 சிறப்பாசிரியர்

கே.அசோகன்





பட்டமளிப்பு விழாவில் மணிமேகலை பிரசுரத்தின் உரிமையாளரில் ஒருவரான திரு.ரவி தமிழ்வாணன் அவர்களுடன்....




லி.நௌஷாத் கான்
சிறப்பிதழ்









இசை அமைப்பாளர் சபேஷ் முரளி அவர்களுடன்





Nowsath Khan
25 Jan 2017 ·

சாதி ,மதம் கடந்த பல சமுதாய கருத்துக்களை உள்ளடக்கிய எனது "வெள்ளை காகிதத்தில் ஒரு கரும்புள்ளி "சிறுகதை நூலை தமிழ் திரைப்பட இயக்குனர் திரு .கே .பாக்யராஜ் அவர்கள் வெளியிட்டார்கள் எனது சார்பாக எனது சகோதரர் நூலை பெற்று கொண்டார் ....இந்த எளியவனை உங்கள் அன்பு உள்ளத்தால் வாழ்த்துங்கள் ..மென்மேலும் வளர எல்லாம் வல்ல இறைவனிடம் பிராத்தனை செய்யுங்கள் ...

வெள்ளை காகிதத்தில் ஒரு கரும்புள்ளி என்ற எனது சிறுகதை நூலை இயக்குனர் பாக்யராஜ் சார் வெளியிட்டார்



லி.நௌஷாத் கான்
சிறப்பிதழ்







இயக்குனர் EV கணேஷ் பாபு அவர்களுடன்





கவிஞர் குட்டி ரேவதி அவர்களுடன்



லி.நௌஷாத் கான்
சிறப்பிதழ்



பாடகி சித்ரா அம்மா அவர்களுடன்



துபாயில் வசிக்கும் தமிழ் எழுத்தாளர் திரு.இர்பான் அவர்களுடன்



வந்தை எழுத்தாளர் திரு தமிம் அவர்களுடன்



வந்தை கவிஞர் யூசூப் ஜாகிர் அவர்களுடன்



லி.நௌஷாத் கான்
சிறப்பிதழ்

வந்தவாசி கவிஞர்கள் கூட்டமைப்பில் எடுத்த புகைப்படங்கள்...









துபாயில் வசிக்கும் தமிழ் எழுத்தாளர்கள் கூட்டமைப்பில் எடுத்த புகைப்படம் (வருடம் 2017)



நடிகை சிஜா ரோஸ் அவர்கள் என் புத்தகத்துடன்...



திரைப்பட நடிகர் பரத் அவர்களுடன்...

வாழ்க்கை...

நிறைவேறுகிறதோ இல்லையோ
எதிர்பார்ப்புகள்
அதிகமாகிறது காதலில்!

எதையும்
எதிர்பார்ப்பதில்லை
உண்மையான காதல்!

உண்மையான காதலர்கள்
எப்பொழுதும் வேண்டுவது
பிரியாத வரம் வேண்டும்!

நீ என்னைக்
காதலித்த பிறகு நான்
பிறவிப் பயனை அடைந்தேன்!

எதிர்பார்ப்புகளை
உண்டாக்குவதில்
ஏமாற்றங்களே பிரதானம்!

வெற்றியின்
நம்பிக்கை
எதிர்பார்ப்பு!

நன்மையோ தீமையோ
வாழ்க்கையை நகர்த்துகிறது
எதிர்பார்ப்புகள்!

எவருக்குமே
அழகு சேர்ப்பது
நல்ல குணங்கள்!

தேவைகளும்
தேடல்களுமே
வாழ்வை நகர்த்துகின்றன!

அளப்பரிய பொய்கள்
உலவுகிறது
நீதிமன்றங்களில்!



முத்து ஆனந்த் வேலூர்

அடுத்த இன்று இதழ் ஜீன் 16-30
மினி கதை சிறப்பிதழ்
10 – 15 வரிகளுக்குள்
சுருக்கமாக எழுதவும்.

படைப்புகளை 12.06.2026-க்குள் அனுப்பவும்.

பார்வை

ஒரு பார்வை என்ன செய்துவிட
முடியுமென்றரிந்தேன்....
உனை பார்த்தபின் !

பிரதட்சணம்

அடி மேல் அடி வைத்து அடி
பிரதட்சணம் செய்யும் உன்
பின்னால்....
அங்க பிரதட்சணம் செய்கிறேன்
உனை நினைத்து !

அழகி !

அவள்...
திருநங்கை என்பதை நான்
அடையாளம் கண்டது
அவளின் குரலால் மட்டுமே !

கைப்பேசி

காகித தாளில் கவிதை எழுத
கை நடுக்கம்...
கைப்பேசி செய்த மாற்றம் !



எம்.பி.தினேஷ். கோவை – 25

...
அம்மாவும் மகளும்
விரும்பி அணிந்து மகிழ்ந்தனர்
நைட்டி
...
இரு நாட்டு சண்டையில்
பலி கடா ஆனது
விறகு அடுப்பு
...
மழையில் நனைந்து
வாழ தொடங்கியது
விவசாயம்
...
வாழ்க்கையைத் தேடி
வெகு தூர பயணம்
பணியிடம்
...
செலவு செய்திட
நீண்ட வரிசையில் நின்றான்
வங்கி.



திருச்சிற்றம்பலம் சுரேஸ்

கடல்

அலைகள் ஆடும்
நீல நிற கதைகள்
மனதை கவரும்

இரவு

நிலா சிரிக்கும்
நட்சத்திரம் துலங்கும்
அமைதி பேசும்

பறவை


வானில் பறக்கும்
சுதந்திர கனவுகள்
சிறகில் எழுதும்

காலை

பனித்துளி தழுவி
சூரியன் எழுந்திடும்
புது நாள் பிறக்கும்

மழை

மழைத்துளி விழும்
மண்ணின் வாசம் நெஞ்சில்
சுகம் தருகிறது



நடேஷ் கன்னா, கல்லிடைக்குறிச்சி

கனியாத மரம்
கவலையின்றி வேறெங்கோ பறக்கும்
உறவுகள்.

போட்டியில் தவறிய
படைப்புகள் ஏழைப் பெண்ணின்
திருமணம்.

சொர்க்கத்துத்
திருமணங்கள்
மெல்ல நகர்கிறது
நரகம் நோக்கி




கண்ணாடிப் பார்த்து
கவலைப் படுவதேன், அவர்கள்
வாரிசு.

சட்டப்படி சந்திப்போம்
விலைபேசி முடிக்கப் படுகிறது
நீதி.

அன்பை விதைத்து
உறவுகள் வளத்தேன் அத்தனையும்
முகமூடிகள்.

கூட்ட நெரிசல்
புன்னகையுடன் நடத்துநர் என்னிடம்
சில்லறை.

.



குடந்தை பரிபூரணன்

தேர்தல்,வெற்றி

விழிகளில்
மை,எழுதினாள்
இதழ்களின்
புன்னகையால்,
ஆதரவு, அளித்தாள்
கால் பெரு விரலில்
நாணமென்ற
மை, பூசினாள்
இதய சின்னத்தில்
காதல் வாக்களித்து
தேர்வு செய்து
கொண்டாள்
"கணவனாகவே"

இதய ஒலி

காதலியின்,
இதய ஒலியின்
சப்தத்தை
இரசிக்கும், எந்த
ஆண் மகனும்
தாயின் இதய
அழும் ஒலியை
கேட்பதாக இல்லை



கே.அசோகன், சென்னை

மினிகதை

ஹைக்கூ...


குறள் வெண்பா எழுதுவதில் வல்லவராகத் திகழும் தமிழறிஞர் தியாகராஜனின் மகன் ஹைக்கூ எழுதுவதில் வல்லவனுக்கு வல்லவனாகத் திகழ்ந்தான்!



மலர்மதி

உடையும் நெஞ்சு

ஒளி பொருந்திய உன் விழியில்
துளி வழியக் கண்டு
உளி விழுந்த கல்லாய்
உடைகிறது என் நெஞ்சு!




சு. அருண் பிரகாஷ்

முதல்வனே

முத்தான மக்களின்
முத்திரையால்
முழு நிலவு
மறைந்த பின்
மகேசனுக்கு உகந்த
மகத்தான நாளில்
மளமளவென எண்ணப்படும்
மங்கலமான ஓட்டுகள்
முதல்வன் யாரென
முடிவை சொல்லிடுமே!
மக்களை காக்க
மட்டுமே நானென
மார்தட்டும் தலைவனெல்லாம்
முதல்வன் அல்ல!
மக்களை என்றுமே
மனிதனாய் நேசிப்பவனே
மக்களின் இனிய
மனதினில் நிற்கும்
மா முதல்வன்!
முத்தான முதல்வன்!
மகத்தான சூளுரையை
மனதினில் பதித்து
மகிழ்வாய் என்றுமே
மக்களை வாழ வை!
முதல்வனே ! முதல்வனே



பா.கலைமகள்



ஜூலை 2026 சிறப்பாசிரியர்
கே.அசோகன்

பெயரதுவும்!!!

நித்தம் நித்தமும்
உனது நினைவதுவே...!
எனை மயக்க
சித்தமும் கலங்கியே...!
பித்தாகிப் போகுதே
எனது முகுளமும்!!!


இடைவிடாது
எனது இதயமும்...!
உனது பெயரையே உச்சரிக்க...!
ஆகுதே மந்திரச் சொல்லாய்



கோவைக்கவி புவனா


வற்றாத சுனை

பாறையின் இண்டு
இடுக்குகளில்
வளைந்து நெளிந்து
சுருங்கி விரிந்து
விழும் நீரைப்போல்
மனது அதன் போக்கில் போயினும்
நீரைப் போல் துவளாமல் நிர்மலமாய்
துல்லியமாய்
அதன் துடுப்பை
நேர் திசையில்
செலுத்தும்
வித்தை நீ கற்றால்
வாழ்க்கை ஒரு
வற்றாத
சுனையன்றோ !



பி. ஆர்.கிரிஜா

நூல் அறிமுகம்



Book overview

A doctor follows one impossible death across continents and centuries, and finds something far older, and far less forgiving, than she imagined.When a researcher dies in circumstances no clinical textbook can explain, the case lands on the desk of a forensic pathologist who trusts only what evidence will allow. What she sees in the autopsy room refuses to fit. The blood will not obey. The cells are turning on themselves with a precision that feels less like illness and more like instruction.

The investigation that follows pulls her out of her laboratory and into places she never expected to stand. A London hospital where one patient becomes two, then more. An ancestral home she had quietly tried to forget. A desert city carved into red sandstone, where a name once spoken in fury has been waiting for someone willing to listen. A forest whose silence is older than the records left to describe it.She is not the only one searching, and not the most determined. The further she travels, the more certain she becomes that the question is no longer who killed the man on her table. The question is what was done, two thousand years ago, by someone who understood exactly how patient revenge could be.

The Simian Echo is a novel about inheritance, concealment, and the long memory of the body. Some things are not buried because they are dead. Some things are buried because they are dangerous. And some of them are no longer content to stay where they were put.

அன்பு

நெல்லுக்கு இறைத்த நீர்
வாய்க்கால் வழியே பாய்ந்தோடி
புல்லுக்கும் பாய்ந்து
வேர் நனைத்து
உயிரூட்டுவது போல்
மனிதர்களின் பாசப் பரிமாற்றம்
சக மனிதர்களிடம்
சென்று சேர்ந்து
அன்பை
விதைக்கிறது
பிரவாகமாய்!!



ஸ்ரீநிவாஸ் பிரபு





எழுதலாம் வாங்க வாட்சப் குழுவில் தஞ்சை ராம் ஆதி நாராயணின் கேள்வி பதில்கள்



எழுத்தாளர் யாரையாவது பார்த்து இவரைப் போல் நாமும் ஆக வேண்டும் என்று நினைத்துள்ளீர்களா?
–நம்.திரு.ரஅம்ஏச், அரியலூர்.

இந்தக் கேள்விக்கு உண்மையாகப் பதில் சொல்ல வேண்டுமானால், எந்த எழுத்தாளர் போலவும் நான் ஆக வேண்டும் என்று நான் ஆசைப்பட்டதில்லை.
பத்திரிகைகளில் எழுதுவதற்கு முன் சிறுவயதிலிருந்தே எனக்கு ஓவியத்தில் ஆர்வம். பள்ளி, கல்லூரி நாட்களில் ஓவியங்கள் நிறைய வரைந்துள்ளேன். அப்படி ஓவியங்கள் மீது அதிக ஆர்வமாக இருந்ததால் ஓவியர்கள் ஜெயராஜ், மணியன் செல்வன், மாருதி, உமாபதி போல் பிரபலமான ஓவியர் ஆகவேண்டும் என ஆசைப்பட்டுள்ளேன். கால ஓட்டத்தில் ஓவியம் வரைவது குறைந்து எழுத்தாளர் ஆகிவிட்டேன்.

நமுட்டுச் சிரிப்பு, குபீர் சிரிப்பு – என்ன வித்தியாசம்?
–இரா.தீனதயாளன், இருவேல்பட்டு.

நமுட்டுச் சிரிப்பு – வாய்க்குள் சிரிப்பது.
குபீர் சிரிப்பு – வாய் விட்டுச் சிரிப்பது.

நகைச்சுவை உணர்வு இல்லாவிட்டால் நம் நாளிலம் எப்படியெல்லாம் இருக்கும்? (எப்படி இருக்கும் என்று ஏன் கேட்கவில்லை என்று தெரிகிறதா?)
–இரா.தீனதயாளன், இருவேல்பட்டு.

எப்படியெல்லாமோ இருக்கும்.
(எப்படி இருக்கும்னு நானும் சொல்லலை சார்!)

[தஞ்சையின் பெருமையாக நீங்கள் நினைப்பது?
(தஞ்சைப் பெரிய கோவில் தவிர)
–இரா. கமலக்கண்ணன், சித்தோடு

தஞ்சாவூர் ஓவியங்கள், தஞ்சாவூர் வீணை, தஞ்சாவூர் தலையாட்டி பொம்மைகள், சரஸ்வதி மஹால் நூலகம்...எல்லாவற்றுக்கும் மேலாக தஞ்சை மண்ணின் ஒற்றுமையான எழுத்தாளர்கள்.

இன்றைக்கு நிறைய ஜோக் எழுத்தாளர்கள் குறைந்து வருகிறார்களே.. காரணம் பத்திரிகைகளா அல்லது ஜோக் வறட்சியா?
– கே. ராஜபாலு, சேலம்–1

நிச்சயம் ஜோக் வறட்சி இல்லை. ஜோக் எழுத்தாளர்களை ஊக்கப்படுத்தாத, சரியாக சன்மானம் தராத பத்திரிகைகள்தான் காரணம்.

அடுத்த இதழ்
ஜீன் 16-30
மினி கதை சிறப்பிதழ்

நீங்கள் வரைந்த ஓவியங்கள் ஒரு சிலவற்றை பகிரலாமே ஆதி?

–எஸ். வைத்தியநாதன், மதுரை

இதோ சார்!



---

1. அரசியல்
2. திரையுலகம்
3. நாவல் ஆசிரியர்கள்
4. பத்திரிகை ஆசிரியர்கள்
5. ஆன்மீகம்
6. சமூக ஆர்வலர்கள்
7. நகைச்சுவை துணுக்கு எழுதுபவர்

இதில் பொதுவாக யாருக்கு முதலிடம் தருவீர்கள்?

–ஆறுமுகம் நாகப்பன்

நகைச்சுவை எழுதுபவருக்குத்தான் முதலிடம்.

சொந்த வாழ்வின்
சோகங்களை மறந்து....
போராடி இந்தியாவுக்காக
வெற்றிகளை குவிக்கும்
ஸ்மீர்த்தி மந்தனாவின்
போராட்ட குணம் பற்றி...?

–ஜி. சுந்தரமூர்த்தி, முசிறி

ஸ்மீர்த்தியின் கீர்த்தி மேன்மேலும் உயரட்டும் சார்!

ட்ரெண்டிங் ஜோக்ஸ் குறித்து உங்கள் கருத்து?

–ஏந்தல் இளங்கோ

ஜோக் போட்டிகளில் ட்ரெண்டிங் ஜோக்ஸ் வரவேற்கக்கூடியவை. காரணம் அவை பழைய ஜோக்காகவோ, காப்பி ஜோக்காகவோ இருக்காது. ஆனால், ட்ரெண்டிங் ஜோக்ஸ்ஸில் குபீர் சிரிப்புக்குக் கியாரண்டி கிடையாது. ஆனால், நடப்பு மெஸேஜ் இருக்கும். ட்ரெண்டிங் ஜோக்ஸான விகடன் ஜோக்ஸைவிட நார்மலான குமுதம் ஜோக்ஸ் தான் சிரிப்பை வரவைக்கின்றன சார்!

வியர்வை சிந்தி சம்பாதித்த பணத்துக்கும்,
சிந்தனை சிந்தி சம்பாதித்த பணத்துக்கும் என்ன வித்தியாசம்?

–ஜி. சுந்தரமூர்த்தி, முசிறி

வியர்வை சிந்தி சம்பாதித்த பணம்... உழைப்பின் அடையாளம். சிந்தனை சிந்தி சம்பாதித்த பணம்... அறிவின் அடையாளம்.

பொதுவாக எழுத்தாளர்கள் என்று அறியப்படுபவர்களிடம் ஒற்றுமை குறைவாக இருப்பது போல் உள்ளது.

உங்கள் பார்வையில் இதை எப்படி பார்க்கிறீர்கள்?
–நம்.திரு.ரஅம்ஏச். அரியலூர்.

பெரிய பெரிய எழுத்தாளர்களிடம் ஒற்றுமை குறைவாகத்தான் உள்ளது. அதற்குக் காரணம் ஈகோ தான். எழுத்தின் தரம் எவ்வளவு உயர்வாக இருந்தாலும், நம் மதிப்பில் அந்த எழுத்தாளர்கள் தரம் தாழ்ந்து போய்விடுகிறார்கள்.

உருவக்கேலி தொடர்புடைய நகைச்சுவைகள் பற்றிய உங்கள் பார்வை?
–கி.சரஸ்வதி, ஈரோடு

உருவக்கேலி நகைச்சுவைகளில் எனக்கு உடன்பாடு இல்லை மேடம். நிச்சயம் தவிர்க்க வேண்டும். உருவக்கேலி செய்யாமலேயே நகைச்சுவைகள் எழுத நிறைய விஷயங்கள் உள்ளன.

உங்களுக்குப் பிடித்த நிகழ்கால நகைச்சுவை எழுத்தாளர்கள் முதல் ஐந்து பேர் யாரெனச் சொல்ல முடியுமா?

–மு.க.இப்ராஹிம் வேம்பார்

எனக்கு ரொம்பப் பிடித்த நகைச்சுவை எழுத்தாள நண்பர்கள் நிறைய இருக்காங்க சார்...உங்களையும் சேர்த்து. நம் நண்பர்களின் நகைச்சுவைகளை குறைத்து மதிப்பிட முடியாது. ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமான ஜோக்ஸ் எழுதுவதில் கில்லாடிகள்.

எஸ். பி. ராமு அவர்களின் சூப்பர் நாவல், நாவல் லீடர் காலத்தில் இருந்தே நீங்கள் எழுதி வருகிறீர்களே... அதைப் போல மாத நாவல்கள் இப்போது ஜெயிக்க வாய்ப்பு உண்டா?
ப. காளிதாசன், நீர்விளங்குளம்

மாத நாவல்கள் இனி பெரிதாக ஜெயிக்க வாய்ப்புகள் இல்லை. காலம் மாறிவிட்டது.

பொதுவாக வாசக எழுத்தாளர்களை அவர்கள் குடும்பமே பாராட்டாது. அர்ச்சனை தான் செய்யும். அப்படிப்பட்ட நிலையில் உங்களின் எழுத்துக்களை உங்கள் குடும்பத்தார் எப்படி எடுத்துக் கொள்கிறார்கள்?
ப. காளிதாசன், நீர்விளங்குளம்

சில சமயங்களில் பாராட்டு...பல சமயங்களில் திட்டு.

ஒரு எழுத்தாளர் எப்பொழுது முழுமை பெறுகிறார்?
தே. ராஜாசிங் ஜெயக்குமார், தஞ்சாவூர்.

மனைவி பாராட்டும் போது.

சினிமாவில் ஓய்ந்தபின் அரசியலுக்குள் நுழைவது போல், எழுதுவது குறையும் நேரத்தில் அரசியலுக்குள் நுழையலாமா?
தே. ராஜாசிங் ஜெயக்குமார், தஞ்சாவூர்.

தாராளமாக எழுத்தாளர்கள் அரசியலில் நுழையலாம் சார்! அதுக்கு முன்னாடி சினிமாவுல நுழைஞ்சு நாலஞ்சு படத்துல தலையைக் காட்டிடணும்.

ஒரு எழுத்தாளருக்குத் தேவையானது என்ன... தேவையற்றது என்ன?
தே. ராஜாசிங் ஜெயக்குமார், தஞ்சாவூர்.

ஒரு எழுத்தாளருக்குத் தேவையானது... எழுதுவதற்கான அமைதியான சூழல், அவரது எழுத்துக்கான அங்கீகாரம், போதுமான வருமானம். தேவையற்றது... போட்டி, பொறாமை, ஈகோ.

ஜோக் மூலமாக ஏதாவது மெசேஜ் கடத்தி இருக்கிறீர்களா?
கி. ரவிக்குமார், தூத்துக்குடி

இந்த ஜோக்கில் ஒரு மெஸேஜ் இருக்கு கி.ர சார்!



தற்போதைய பத்திரிக்கை உலகம் பற்றிய உங்கள் பார்வை என்ன?
கி. ரவிக்குமார், தூத்துக்குடி

பத்திரிகைகளை வாசிப்பது குறைந்து விட்டதால், தற்போதைய பத்திரிகை உலகம் லாபம் குறைந்து பின்னோக்கிச் செல்கிறது. பத்திரிகைகாரர்களுக்கு என்று ஒரு காலம் இருந்தது. ஒரு கௌரவம் இருந்தது. அது தற்போது இல்லை. பத்திரிகைகளுக்கு எழுதும் வாசக எழுத்தாளர்களுக்கு சரியாகச் சன்மானம் கூட தரமுடியாதபடி சில பத்திரிகைகளின் நிலைமை ஆகிவிட்டது.

உங்களை எழுத்தாளராகத் தூண்டிய வித்து அல்லது எழுதத் தூண்டியது எது? அல்லது யாரை சொல்வீர்கள்?
ஏ.ஜி.முகம்மது தௌபீக்,
மேலப்பாளையம்.

நான் எழுத்தாளராக மாற காரணம் என் அப்பாவும், பிரபல ஓவியர் அமரர் உமாபதியும் தான். ஓவியர் அமரர் உமாபதி அவர்கள், என் அப்பாவின் பால்ய நண்பரின் மாமனார். அந்தப் பழக்கத்தில் நான் ஓவியத்தில் ஆர்வமானேன். அப்பா பத்திரிகைகளுக்கு ஜோக்ஸ் அனுப்புவாங்க. அவற்றில் சில ஜோக்ஸ் பிரசுரம் கண்டுள்ளன. அப்பாவிடமிருந்து பத்திரிகைகளுக்கு எழுதும் பழக்கம் எனக்கும் வந்துவிட்டது.



ஜூலை 2026 சிறப்பாசிரியர்

கே.அசோகன்

நீங்கள் எழுதி பிரசுரமான நகைச்சுவைகளில் உங்களையே சிரிக்க வைத்த நகைச்சுவை எது?

ஏ.ஜி.முகம்மது தௌபீக்,
மேலப்பாளையம்.


நான் எழுதி எனக்கு சிரிப்பு வர வைத்த ஜோக்ஸ் நிறைய உள்ளன. சாம்பிளுக்கு சில...



''எதுக்கு நாதஸ்வர வித்வானை, 'டூ வீலர்'ல கூட்டிட்டுப் போறே?''

''டிராபிக் போலீஸ்காரங்க, 'டூ வீலர்'ல போறவங்களை நிறுத்தி, 'ஊதிக்காட்ட' சொல்றாங்களாமே!''

— ராம். ஆதிநாராயணன், தஞ்சாவூர்.







ஒரு படைப்பை எழுதத் தொடங்குமுன், அதை எழுதி முடித்தப் பின், அதை பத்திரிக்கைக்கு அனுப்பிய பின்... இந்த மூன்று செயலை செய்ய ஒரு படைப்பாளி எந்த வழி முறையை கையாள வேண்டும்?
திருச்சிற்றம்பலம் சுரேஷ்

ஒரு படைப்பை எழுதத் தொடங்குமுன் எதைப் பற்றி எழுதுகிறோமோ அதைப் பற்றிய சிந்தனைக்கு முழுதாக மாறிவிடவேண்டும். எழுதி முடித்தப் பின் எந்தப் பத்திரிகைக்கு அந்தப் படைப்பு பொருந்தும் என பார்த்து அனுப்ப வேண்டும். அனுப்பிய பின் எத்தனை வாரத்தில் அல்லது எத்தனை மாதத்தில் வருகிறது என்று பார்க்க வேண்டும். ஒருவேளை ஒரு வருடம் கழித்தும் வராவிட்டால் வேறொரு பொருத்தமான பத்திரிகைக்கு அனுப்பி வைக்கலாம்.

ஒரு படைப்பாளி... ஒரு பத்திரிக்கைக்கு கதை, கவிதை அனுப்ப விரும்புகிறார். உடனடியாக அனுப்புவது சிறப்பா? அந்த பத்திரிக்கை கதை, கவிதையை எப்படி தேர்வு செய்கிறது என்பதை ஆராய்ச்சி செய்ய வேண்டுமா?
திருச்சிற்றம்பலம் சுரேஷ்

எந்தப் பத்திரிகைக்கு அனுப்புகிறோமோ அந்தப் பத்திரிகையில் பிரசுரமாகும் படைப்புகள் எந்த வகையில் உள்ளன

என்பதைப் பார்த்து, அந்தப் பத்திரிகையின் தேர்வுக்கேற்ப அனுப்புவதே நல்லது. நான் அப்படித்தான் அனுப்புகிறேன்.

ஒரு பத்திரிக்கை, நம் படைப்பை எத்தனை மாதத்தில் பரிசீலனை செய்து வெளியிடும்?
திருச்சிற்றம்பலம் சுரேஷ்

சில படைப்புகள் ஒரே வாரம், ஒரே மாதத்திற்குள்ளும் வருகிறது. சில படைப்புகளுக்கு தினமலர்– வாரமலர், சிறுவர் மலரில் ஒரு வருடத்திற்கு மேலும் ஆகிறது.

நாலைந்து தலைமுறைக்கு சொத்து சேர்ப்பது, உழைத்து சம்பாதித்து ஜாலியாக செலவு செய்துவிட்டு போய்ச்சேருவது... இதில் எது சிறப்பான வாழ்வு?
கா.இளையராஜா,சாத்துக்கூடல்

வாழ்க்கையை ஜாலியாக அனுபவிக்கத்தான் சம்பாதிக்கிறோம். சொத்து சேர்ப்பதைவிட நம்மை எந்தத் தருணத்திலும் விட்டுக் கொடுக்காத உறவுகளையும், நண்பர்களையும் சொத்தாகச் சேர்ப்பதே பெரிய சொத்து சார்!

படித்தவர்களுக்கு தேவை அரசுப்பணியா? சமூக அந்தஸ்தா?
கா. இளையராஜா, சாத்துக்கூடல்

படித்தவர்களுக்கு அரசுப்பணியும் தேவை. அவர்களுக்கான சமூக அந்தஸ்தும் தேவை.
படித்தவர்களுக்கு அரசுப்பணி கிடைத்து விட்டால், அதுவே அவர்களுக்கு சமூக அந்தஸ்து பெற்றுத் தந்துவிடும்.

உங்கள் அபிமான தலைவரை யாராவது ஏசினால் கோபம் பொத்துக் கிட்டு வருமா...வராதா?
ஆர். மணிவண்ணன், நாகப்பட்டினம்


வராது. யாராக இருந்தாலும் விமர்சனத்துக்கு உட்பட்டவர்கள் தான் சார்!

நீங்கள் எழுத்தை ரசிக்க, சுவைக்க என்ன காரணம்?
ஆர். மணிவண்ணன், நாகப்பட்டினம்

எழுத்துதான் காரணம். எழுத்து நமக்கான அடையாளம்.
சிந்தனைக்கான களம். நமக்குக் கிடைத்த வரம்.

புதிய திரைப்படங்களைப் பொதுவாக முதல் நாளிலியே பார்த்துவிடும் நீங்கள் யூ ட்யூபில் விமர்சனம் செய்தால் என்ன?
எஸ். வைத்தியநாதன், மதுரை

சினிமா பார்ப்பது நண்பர்கள் அழைப்பதாலும், ரிலாக்ஸுக்காகவும் தான். அந்த இரண்டரை மணி நேரம் மற்ற கவலைகள் இருக்காது. முக்கியமாக செல்போன் பார்ப்பதைத் தவிர்க்க முடிகிறது. எல்லா படங்களையும் முதல் நாளில் பார்த்து விடுவதில்லை சார்! யூ ட்யூபில் விமர்சனம் செய்வது பற்றி தற்போதைக்கு எந்த ஐடியாவும் இல்லை சார்!



ஜீலை 2026 சிறப்பாசிரியர்

கே.அசோகன்

பத்திரிகை உலகத்தில் நீங்கள் பெற்ற பெரும் பரிசுகள் மூன்றைக் குறிப்பிடுங்களேன்.
எஸ். வைத்தியநாதன், மதுரை

முதலாவதாக 2011–ஆம் ஆண்டு தினத்தந்தி நாளிதழ் நடத்திய உலகக்கோப்பை கிரிக்கெட் போட்டி தொடர்பான பொதுஅறிவு போட்டியில் முதல் பரிசு ரூ. 2,50,000 மற்றும் மூன்றாம் பரிசு ரூ. 1,00,000 பரிசு கிடைத்தது. (அப்போதைய மதிப்பில் 14 பவுன்கள் தங்க நகைகளாக பரிசு கிடைத்தது)
இரண்டாவதாக அதே வருடம் கலைஞர் தொலைக்காட்சி நடத்திய போட்டியில் ரூ. 2,00,000 மதிப்பிலான வீட்டு உபயோகப் பொருட்கள் பரிசு கிடைத்தது.
மூன்றாவதாக கோக்கோகோலா நடத்திய பொதுஅறிவு போட்டியில் 32 கிராம் தங்கம் கிடைத்தது.
அவை மட்டுமல்லாமல் ஆனந்த விகடன் அரசியல் கமெண்ட் போட்டியில் 7 கிராம் தங்கம், அவள் விகடனில் ஒரு ஏசி, மைக்ரோவேவ் ஓவன், கல்கியில் 4 கிராம் தங்கம், ஒரு வாஷிங் மெஷின் என பத்திரிகைகளில் இன்னும் நிறைய பரிசுகள்

[----------

இதுவரை உங்களுடைய படைப்புகள் எத்தனை வெளியாகியுள்ளன? எவை எவை? எந்தப் பத்திரிகைகளில்? உங்களுடைய படைப்புகளை சேகரித்து ஆல்பமாக செய்து வைத்துள்ளீர்களா?
எஸ். கார்த்திகேயன் (எஸ்கா)

என்னுடைய படைப்புகளை எண்ணி வைத்துக்கொள்ளவில்லை சார்! ஆனாலும் தோராயமாக 10,000 தாண்டிவிட்டது.

சில ஒரு பக்கக்கதைகள், கவிதைகள், ஹைக்கூ கவிதைகள், ஜோக்ஸ், டயலாக், கார்ட்டூன், பஞ்ச், துணுக்குகள், கேள்வி–பதில், வாசகர் கடிதம், போட்டிகளில் பங்களிப்பு என படைப்புகள் வந்துள்ளன.

குமுதம், குமுதம் ஜங்ஷன், குமுதம் ரிப்போர்ட்டர், ஆனந்த விகடன், நாணயம் விகடன், ஜூனியர் விகடன், ஜூனியர் போஸ்ட், சாவி, இதயம் பேசுகிறது, உஷா, பாக்யா, தாய், அமுதசுரபி, நாவல் லீடர், தேவி, ராணி, சிறுகதை கதிர், தினத்தந்தி, தினமலர், தினகரன், தினமணி, காலைக்கதிர், அனிச்சம் மின்னிதழ் என நீளமான பட்டியல் இருக்கு சார்!

சினிமா மாயையில் இருந்து பொதுமக்களை விடுவிக்க என்ன செய்யலாம்?
குடந்தை பரிபூரணன்.

சினிமாவை பொழுதுபோக்கு அம்சமாக மட்டுமே பார்க்க வேண்டும். அதை விடுத்து சினிமாவே வாழ்க்கை என்பது போல பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் ஒரு பிரிவினர். சினிமா மாயையிலிருந்து பொதுமக்களை விடுவிக்க வேண்டுமானால் கல்வி, விளையாட்டு, எழுத்து, ஓவியம், பொது அறிவு, பொருளாதார வளர்ச்சிக்கான விஷயங்களில் அவர்களை திசை திருப்ப வேண்டும்.

நகைச்சுவையை அதிகம் கையாள்வது எந்த மாநில மொழி திரைப்படம்?
ஆறுமுகம் நாகப்பன்

அன்றும் இன்றும் தமிழ் மொழி திரைப்படங்களில் தான் நகைச்சுவை கொடி கட்டிப் பறக்கிறது.

தாங்கள் மிகவும் ரசித்த டாப் த்ரீ தமிழ் திரைப்பட நகைச்சுவை காட்சிகள்?
ஆறுமுகம் நாகப்பன்

அவ்வை சண்முகி, மைக்கேல் மதன காமராஜன், சிவாஜி, தில்லு முல்லு, வின்னர், கிரி, மருதமலை படங்களின் காமெடி காட்சிகள் ரொம்பப் பிடிக்கும்.

"கையால ஓட்டு போட்டா, விரல்ல மை வைக்கிற மாதிரி, குரல் வாக்கெடுப்பு மூலம் போடுற ஓட்டுக்கு, உதட்டுல மை வைப்பாங்களான்னு கேட்கிறாரே!"

சு. அருண் பிரகாஷ்





என்னது..இயற்கை எய்தினார்னுதானே போடுவாங்க..இந்த நோட்டீஸில் மட்டும் செயற்கை எய்தினார்னு போட்டிருக்கு ? அட ...அவர் தற்கொலை பண்ணிக்கிட்டாராம் !

எம்.அசோக்ராஜா




"அந்த பச்சிலை வைத்தியருக்கு twins பெண் குழந்தைகள் பிறந்திருக்குன்னு சொன்னாங்களே. ரெண்டு பேருக்கும் என்ன பேரு வெச்சிருக்காரு ?"

ஒரு பெண்ணுக்கு 'வள்ளி'ன்னும், இன்னொரு பெண்ணுக்கு 'கற்பூர வள்ளி'ன்னும் பேர் வெச்சிருக்காரு "

-0-0-0-0-0-0-0-0-

"உங்க பையன் 'மணி' இப்போ எந்த நாட்டில் இருக்கான் ?"
"Bellஜியத்துல இருக்கான் "
"????????"

டீ. என்.
பாலகிருஷ்ணன்



1) அப்பா வேலைக்குப் போற என்னை எதுக்கு சமையல் கிளாஸ் போகச் சொல்றீங்க?

உன்னோட கல்யாணத்துக்கு இது அடிஸ்னல் தகுதிடா....

-0-0-0-0-0-0-0-0-

2) யாராவது வர்றப்ப நம்ம வீட்ல மெகா சீரியல் பாக்காதீங்க

ஏங்க?

நம்ம வீட்ல ஏதோ துக்கமுன்னு நினைச்சிக்கறாங்க

ஏ. மூர்த்தி





அறியாமை

அழகான மலர்!
மலர் ஆசனத்தில்
ஒய்யாரமாய் ஒரு சிற்றுயிர்
அதுவும் அழகுதான்!
அது தனக்கு ஒவ்வாதென
மலர் அறியாதது
துன்பியல்!

அறிந்தாலும்
மலரால் என்ன
எதிர்வினை ஆற்ற இயலும்;
என்பது இன்னொரு
துன்பியல்!

வாழ்வின் நிகழ்வுகளும்
இப்படியே!

நன்மையைத் துளைக்கும்
தீமைகள்!

நல்லதைத் தொலைக்கும்;
அல்லவைகள்!

அறியாத மட மனம்
அழகில் மையம் கொண்டு

மையலில் சுழல;
வாழ்க்கையில்
விழுவதும் அழிவதும்!



சசிகலா விஸ்வநாதன்



அடுத்த இதழ்
ஜீன் 16-30
மினி கதை சிறப்பிதழ்



ஒருவர் : புது வீடு, புது கார் எல்லாம் வாங்கி அசத்துறீங்களே! லாட்டரி ஏதாச்சும் அடித்ததா?
அடுத்தவர் : இல்லை. ஐஸ் வியாபாரத்தை விட்டுட்டு விசில் வியாபாரம் பண்ணினேன்.

ஒருவர் : எல்லா வேட்பாளர்களிடமும் காசு வாங்கினாயே! ஓட்டை எப்படி போட்டாய்?
அடுத்தவர் : குலுக்கல் முறையில் தேர்வு செய்து போட்டேன்.

நாஞ்சில் சு. நாகராஜன்





கதைகளில், கவிதைகளில் வரும் பெயர்கள் சம்பவங்கள் அனைத்தும் கற்பனையே... யாரையும் எதையும் குறிப்பிடுவன அல்ல. படைப்புகள் கொடுத்த வலைதளங்களுக்கு நன்றி.

அழகிய ஆரம்பம் இன்று மின்னிதழ் வெளியிடுபவர்

ஆசிரியர் திரு.வெ.கோபிநாத் இன்று மின்னிதழ் - 29 சக்தி நகர், ஆதம்பாக்கம், சென்னை செல் : 7094053241

